## முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

## O.S. No. 219/2021

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தொழில் | |
| த/பெ | சுப்பராயன் | வயது | |
| ஊர் | | தேதி | 07.08.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (07.08.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 3 இன சொத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2 அயிட்ட சொத்துக்கள் கோவில் மானிய சொத்துக்கள் என்பதால் அது தேவை இல்லை என்று சொல்லிவிட்டேன் . அதனை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யலாம்.இந்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா எ ன்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்குசொத்தானது அருள்மிகுசெல்வ விநாயகர் ஆலயம் , சிறுவள்ளிக்குப்பம் கிராமத்திற்கு பாத்தியமானது என்று எனக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது . பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை . இரண்டு இன சொத்துக்கள் கோவிலுக்கு சொந்தமானது என்றும் கோவில் நிர்வாகத்தை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றும் அதனால் உரிய நபர்களை சேர்க்க வில்லை என்ற காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது என்று சொன்னால் வக்கீல் என்னிடம் கேட்டார் நான் நீக்க வேண்டும் என்றால் நீக்கிவிடுங்க என்று சொன்னேன் . பிரமாண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் என்னிடம் படித்து கூறினார் . மீதம் உள்ள வழக்கு சொத்தில் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது ஆனால் விஸ்திரணம் 1 ஏக்கர் வரும். சொத்தினை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார் என்றால் 30 வருடங்களாக அவர்ககள் தான் அனுபவித்து வருகிறார்கள் . பிரதிவாதிகள் 30 வருடங்களாக சொத்துக்களை அனுபவித்து வருவதால் மகசூல் நஷ்டம் வேண்டும் என்று எனது பிரமாண

வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . வழக்குதாக்கல் செய்யும்போது அதில் பிரதிவாதிகள் தான் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 30 வருடங்களாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் தேவை இல்லாமல் நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . கோவிந்தம்மாள் யார் என்றால் அவர் சுப்பராயன் மற்றும் கண்ணம்மாளுக்கும் பிறந்தவர் . கோவிந்தம்மாள் என்பவர் இறந்துவிட்டார் .கோவிந்தம்மாள் கணவர் பெயர் தண்டபாணி . அவர் உயிருடன் தான் இருக்கிறார். கோவிந்தம்மாள் என்பவருக்கு துரை, குமார் என்ற மகன்கள் கீதா என்ற மகளும் இருக்கிறார் என்றால் சரி . மேற்படி நபர்களை சேர்க்க வேண்டும் என்று ஆட்சேபனை தாக்கல் செய்த பிறகு நான் அவர்களை சேர்த்தேனா என்றால் அவர்களை இந்த வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் கோவிந்தன் என்பவருக்கு எதுவும் வேண்டாம் என்று எழுதிக்கொடுத்துவிட்டார்கள் அது தொடர்பான ஆவணங்களை நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

( Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram